செய்தி வெளியீடு எண்:606 நாள்: 20.12.2016

# பத்திரிக்கை செய்தி

## அரிசி தவிட்டு சாம்பலில் இருந்து (Rice Husk Ash) ‘சிலிகா’ (Silica) தயாரித்தல் குறித்த பயிலரங்கு

சென்னை, கிண்டியிலுள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனம், தொழிற்பேட்டை சங்கங்கள் மூலமாகவும், தொழில் வல்லுநர்கள் மூலமாகவும் தொடர்ந்து பல தொழில் முனைவோருக்கும் / தொழிலில் ஈடுபட விருப்பம் உள்ளவர்களுக்கும் பல்வேறு விழிப்புணர்வு முகாம்களை தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடத்தி வருகிறது.

தமிழக மாவட்டங்களில் பல இடங்களில் அரசி ஆலைகள் இயங்கி வருகின்றன. இந்த ஆலைகளில் நெல்லிருந்து அரிசி நீக்கிய பின் கிடைக்கும் உமி எரிபொருளாக பயன்படுகின்றது. அதன் சாம்பலை அப்புறப்படுத்துவதில் ஆலைகள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றன. இதற்கு மாற்று ஏற்பாடாக சாம்பலில் இருந்து **சிலிகா** என்ற பொருள் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தலாம் என ஆராய்சியின் மூலம் தெரிய வந்துள்ளது. **சிலிகா** தயாரிப்புத் தொழிலை மேற்கொள்வதற்கு உள்ள வாய்ப்புகள் மற்றும் தேவைப்படும் முதலீடுகள் குறித்து ஆய்வு செய்வதற்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி நிறுவனம் அரை நாள் பயிலரங்கம் நடத்தவுள்ளது. இந்த பயிலரங்கத்தில் **சிலிகா** தயாரிக்கும் இயந்திர உற்பத்தியாளர்கள், **சிலிகா** வியாபாரிகள் கலந்துக்கொண்டு அரிசி ஆலையாளர்களுக்கு தங்களது கருத்துக்களை வழங்குவார்கள். மேலும் இத்தொழிலில் சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களும் மற்றும் ஆய்வு மேற்கொள்கின்ற கல்லூரி ஆசிரியர்களும் இப்பயிலரங்கத்தில் கலந்துக்கொண்டு ஆலோசனைகள் வழங்க உள்ளனர். 1 டன் சிலிகா உற்பத்தி திறனுள்ள தொழில் அமைப்பதற்கு சுமார் ரூ.1.5 கோடி முதலீடு தேவை. இத்தொழிலைத் துவங்க விரும்பும் தொழில்முனைவோரும் இந்த விளக்கக் கூட்டத்தில் கலந்துக்கொள்ளலாம். இப்பயிலரங்கம் 29–12–2016 அன்று காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை கீழ்கண்ட முகவரியில் நடைபெறும்.

தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (பழைய வளாகம்)
T.I. கட்டடம்,
கிண்டி தபால் நிலையம் அருகில்,
திரு. வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை 600 032

இப்பயிலரங்கத்தை குறித்து மேலும் விபரம் அறிய / கலந்துக்கொள்ள, தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனத்தில் தொலைபேசி எண்களான 044–22252081 மற்றும் 044–22252082 அல்லது திரு வை. தே. ஆனந்தன், துணை இயக்குநர் அவர்களின் கைபேசி எண்ணை 9840991716 தொடர்புக்கொள்ளவும். மின் அஞ்சல்: ddcdp@editn.in

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**